**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை - 2023**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதிகாரசபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபை ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபையின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 52 மற்றும் 53 ஆம் பந்திகளுக்கு முரணாக மீளாய்வாண்டின் போது மீள்மதிப்பீட்டு ஒதுக்கக் கணக்கில் ரூபா 6,303,511 பிற்போட்ட வருமானமாக நிதி செயலாற்றல் கூற்றில் செலவு வைக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் பற்றாக்குறை மற்றும் மீள் மதிப்பீட்டு ஒதுக்கக் கணக்கின் மீதி என்பன அப்பெறுமானத்தால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சேவையில் இருந்து விலகிச் சென்ற 04 உத்தியோகத்தர்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 474,794 பணிக்கொடையாக ஒதுக்கப்பட்டதன் காரணமாக அப்பெறுமானத்தால் ஆண்டின் பற்றாக்குறை மற்றும் பணிக்கொடை ஒதுக்கீடுகள் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வில் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவுகள் 2024 ஆம் ஆண்டளவில் தீர்மானிக்கப்பட்டமையினால் குறுங்கால ஒதுக்கங்களாக காண்பிக்கப்பட்டுள்ளது. | பணிக்கொடை ஒதுக்கீடு செய்யும் போது சேவையில் இருந்து விலகிச் சென்ற உத்தியோகத்தர் தொடர்பாக கவனம் செலுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் போது தகவல் மற்றும் தொலைத் தொடர்பு தொழில்நுட்ப (ICT) முகவர் நிறுவனத்தில் இருந்து நன்கொடையாகக் கிடைக்கப் பெற்ற ரூபா 2,261,416 பெறுமதியான உபகரணங்கள் நிதிச் செயலாற்றல் கூற்றில் நன்கொடைப் பெறுவனவாக மொத்த பெறுமதியும் கணக்கீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் அதில் ரூபா 130,108 தொகை பிற்போட்ட வருமானமாக நிதிச் செயலாற்றல் கூற்றிலும், ரூபா 2,131,307 தொகை நிதி நிலைமைக் கூற்றிலும் மூலதன | இது உரிமை மூலதனக் கூற்றில் அல்லாமல் ஐந்தொகையில் மேற்கொள்ளப்பட்ட சீராக்கம் ஆகும். இந்த சொத்துக்களுக்காக பெறுமானத் தேய்வு கணிப்பிட்டு உரிமை மூலதனக் கூற்றில் சரியாக சீராக்கப்பட்டுள்ளது. | நன்கொடையாகக் கிடைத்த உபகரணங்களின் மொத்த பெறுமதியும் நிதிச் செயலாற்றல் கூற்றில் நன்கொடைப் பெறுவனவாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மாணியமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (இ) | மீளாய்வாண்டின் போது நன்கொடையாகக் கிடைக்கப் பெற்ற ரூபா 3,909,000 (பிரித்தானிய பவுண் 10,000) பெறுமதியான சிறுவர் துஸ்பிரயோக முறைப்பாடுகளை அறிக்கை இடுவதற்கான இணையதள போர்டல் மென்பொருள் மற்றும் இலங்கை டெலிக்கொம் நிறுவனத்தால் அபிவிருத்தி செய்து வழங்கப்பட்டிருந்த ரூபா 1,461,961 ஆன தரவு முறைமை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு நன்கொடை அளிக்கப்பட்ட இணைதள போர்டல் மென்பொருள் தொடர்பாக பரீட்சித்து எதிர்காலத்தில் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ள வேண்டுமாயின் சரி செய்வதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | மென்பொருள் மற்றும் தரவு முறைமையின் பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் பிற்போட்ட வருமானம் ரூபா 14,115,850 ஆக இருந்த போதிலும் அது ரூபா 10,260,674 ஆகவும், முன்னைய ஆண்டில் கிடைத்த ரூபா 3,253,206 காசுப்பாய்ச்சல் கூற்றில் ஆண்டின் பற்றாக்குறையில் சீராக்கப்பட்டதன் காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான காசுப் பாய்ச்சல் ரூபா 601,969 அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது | காசுப் பாய்ச்சல் கூற்றில் சீராக்கப்பட்ட நிலையங்கள் மாற்றமடைந்த போதிலும் தேறிய காசுப் பாய்ச்சலில் தாக்கங்கள் ஏற்படவில்லை. | நியமத்தின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றுத் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (உ) | காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது மீளாய்வாண்டில் கிடைத்த செயற்திட்ட உதவி ரூபா 3,378,000 தொகை காசு உட்பாய்ச்சலாக இனங்காணப்பட்டிருந்தமை மற்றும் மூலதன மானியமாக கிடைத்த ரூபா 697,756 காசு உட்பாய்ச்சலாக காண்பிப்பதற்குப் பதிலாக ரூபா 3,440,856 காசு வெளிப்பாய்ச்சலாக இனங்காணப்பட்டதன் காரணமாக ரூபா 760,612 இனால் காசுப் பாய்ச்சல் கூற்றில் நிதி செயற்பாடுகளில் | காசுப் பாய்ச்சல் கூற்றில் சீராக்கங்கள் தொடர்பாக மேலும் பரீட்சித்து எதிர்காலத்தில் சரி செய்வதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என | காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது காசு வெளிப்பாய்ச்சல் மற்றும் உட்பாய்ச்சல் சரியாக இனங்காணப்படல் வேண்டும். |

இருந்து உருவான காசின் அளவு அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| வியடம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப் படுத்துதல் | 2,568,680 | பாடசாலை காகிதாதிகள், உதவி கையளிக்கப்பட்டமை மற்றும் உரிய நலனாளிகளால் உதவி கையேற்கப்பட்டமைக் கான ஆவணங்கள் | 2024 ஆம் ஆண்டின் போது இந்த குறைபாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என | நிதி உதவிகள் கையளிக்கப்பட்டமைக்கும் , உரிய நலனாளிகளால் நிதி உதவிகள் கையேற்கப்பட்டமைக்கும் எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1958 இன் 50 ஆம் இலக்க சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சட்டம் | | | |
| (i) | 14(ஊ) பிரிவு | சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான தேசிய கொள்கைக்காக 2019 ஒக்தோபர் 29 ஆம் திகதி அங்கீகாரம் கிடைத்த போதிலும் இந்த கொள்கையினை அமுல்படுத்துவதற்கு உரிய ஐந்து வருட செயல் நடவடிக்கைத் திட்டத்திற்காக அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தவறி இருந்தது. அதன் காரணமாக உரிய தேசிய செயலணிக் குழு, | சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான தேசிய கொள்கையின் வரைவிற்காக பல சந்தர்ப்பங்களின் போது வரிசை அமைச்சினால் திருத்தங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக காலம் எடுத்திருந்தது என | சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக தேசிய கொள்கை ஒன்றை அமுல்படுத்துவதற்கு உரிய ஐந்து வருட செயல் நடவடிக்கைத் திட்டத்திற்காக அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மாகாணக் குழு, மாவட்ட மற்றும் பிரதேசக் குழு சுயாதீன தொழில் நுட்ப ரீதியில் ஸ்தாபித்தல் மற்றும் நடாத்திச் செல்வதற்கு அதிகார சபை தவறியிருந்தது. | | |
| (ii) | 14(ஏ) பிரிவு | மீளாய்வாண்டின் போது சிறுவர் துஸ்பிரயோக வழக்கு தொடர்பாக சட்டப் பிரிவினால் கோரப்பட்ட தகவல்கள் 96 பொலிஸ் நிலையங்களில் இருந்து கிடைத்திருக்கவில்லை. மேலும் சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பான வழக்கு நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அதிகார சபையின் சட்டப்பிரிவு தவறியிருந்தது. | பொலிஸ் ஊடாக சேகரிக்கப்பட்ட வழக்கு தகவல்கள் பொலிஸ் உத்தியோகத்தர்களின் உதவியுடன் நாளது வரையாக்குவதற்கான திட்ட முறைமை ஒன்று தயாரிக்கப்பட்டிருந்த போதும் போதியளவான ஆற்றலுடைய பதவியணியினர் அதிகார சபியின் சட்டப் பிரிவில் காணப்படாமையின் காரணமாக இந்த வழக்கு தகவல்கள் யாவும் முறையாக நாளது வரையாக்கல் 2023 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்படவில்லை என | சட்டத்தின் பிரகாரம் வழக்கு நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல் வேண்டும். |
| (iii) | 14 (உ), (ஓ), (எ) பிரிவுகள் | 2011 ஆம் ஆண்டு முதல் இந்த அறிக்கைத் திகதி வரையும் அதிகார சபைக்கு சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பாக 123,732 முறைப்பாடுகள் கிடைத்திருந்ததுடன் அந்த முறைப்பாடுகளில் 52,922 அதாவது 43 சதவீதம் மேலும் விசாரணையில் காணப்படுகின்றது. அதனால் சிறுவர் துஸ்பிரயோகங்களுக்கு முகம் கொடுத்த சிறுவர்கள் தொடர்பாக விசாரணை செய்யும் செயற்பாடுகளில் சிறுவர் பராயமடைவதற்கு முன் பூர்த்தி செய்வதற்கான | 2011 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை கிடைத்த முறைபாடுகள் யாவற்றுக்கும் தேவையான அடிப்படை காரணங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் 2011 ஆம் ஆண்டிற்குரிய சகல முறைப்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டு முறைமை நாளது வரையாக்கப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டு முதல் ஒட்டுமொத்த முறைப்பாடுகளின் அளவும் மேலும் தொடர்ந்தும் விசாரணை செய்யப்படுகின்றது என | விசாரணையில் காணப்படுகின்ற முறைப்பாடுகளில் விசாரணை நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | திட்ட முறைமை ஒன்றைத் தயாரிப்பதற்கும், அதிகார சபைக்குச் சொந்தமான பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கும் அதிகார சபை தவறியிருந்தது. சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பாக மிகவும் முக்கியமான பணிப் பொறுப்புக்களை நிறைவேற்றுகின்ற மாவட்ட மற்றும் பிரதேச உத்தியோகத்தர்களில் கணிசமான வெற்றிடங்களின் எண்ணிக்கை காணப்பட்டமையும் நாட்டில் அன்றாடம் அதிகரித்துச் செல்கின்ற சிறுவர் துஸ்பிரயோகத்ததை தடுத்தல் தொடர்பாக அதிகார சபை உரிய பொறிமுறை ஒன்றை அமுல்படுத்தாமையும் மேலும் தீர்க்கப்படாத முறைப்பாடுகள் கணிசமானதாக அதிகரிப்பதற்கு காரணமாக இருந்தது. | | |
| (iv) | 14 (க) பிரிவு | தரவு முறைமை ஸ்தாபித்து சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கின்ற இலங்கைப் பொலிஸ், நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம் மற்றும் வரிசை அமைச்சுக்கு இடையே முறையான தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளும் பொறிமுறை ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக நாட்டில் இருந்து கிடைக்கின்ற | துற்போது பேணிச் செல்லப்படுகின்ற தரவு முறைமை தேசிய தரவு முறை ஒன்று வரை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் தரவு முறைமையை தயாரிப்பதற்காக உடன்படிக்கை செய்தல் தொடர்பான அவதானிப்புக்கள் அவர்களுக்கு அனுப்பபட்டுள்ளமையும் அபிவிருத்தி செய்ய வேண்டி பணிகளுக்கான நிதி ஏற்பாட்டைப் பெற்றுக் | சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கின்ற நிறுவனங்களுக்கு இடையே முறையான தொடர்பினை பேணுகின்ற பொறிமுறை ஒன்றாக தரவு முறைமை ஒன்று ஸ்தாபிக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகள் எவ்வனவு என எனவும் மற்றும் அந்த முறைப்பாடுகளின் தற்போதய செயல் முன்னேற்றம் தொடர்பாக கண்டறிந்து உறுதிப்படுத்துவதற்கு அதிகார சபைக்கு முடியாத நிலைமை ஒன்று காணப்படுகின்றமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது. | கொள்ளுதலும் பிரச்சனைக்கு உரியதாக இருந்தது. | |
| (v) | 14 (ஐ) பிரிவு | * மாகாண மட்டத்தில் காணொளி சான்றிதழ்களை இறுவெட்டுப்படுத்தும் அலகு ஒன்றை ஆரம்பிப்பதற்காக 2021 ஆம் ஆண்டின் போது அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் 07 மாகாணங்களில் அதில் அலகுகளை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட தென் மாகாணத்தின் காணொளி சான்றுகளை பதிவுசெய்யும் அலகில் காணப்பட்ட குறைபாடுகளின் காரணமாக 2015 ஆம் ஆண்டு முதல் அந்த அலகு மற்றும் கிடைத்த தொழில்நுட்ப உபகரணங்கள் விளைவற்றுக் காணப்பட்டது. மீண்டும் அந்த தொழில்நுட்ப | தென்மாகாண காணொளி சான்றுகளை பதிவுசெய்யும் அலகுகளில் ரெக்கோடர் இயந்திரம் காணப்படாமை மற்றும் மேலும் தொழில்நுட்பத்தை அபிவிருத்தி செய்து சேகரிக்க வேண்டியிருந்தமையும் அந்த பதிவுசெய்தலை மேற்கொள்ள முடியாத நிலைமை தோன்றி இருந்தது. கராப்பிட்டியில் அமைந்துள்ள அலகிற்காக உத்தியோகத்தர்கள் 2022 பெப்ரவரி மாதம் சேர்க்கப்பட்ட போதும் பிரிவினை ஆரம்பிக்க முடியாதிருந்தமையால் அவர்கள் இது வரையில் பிரதான அலுவலகத்தில் இருந்து பிரிவின் சேவைக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். | சுட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் காணொளி சான்றுகளை பதிவுசெய்யும் நிலையம் ஒன்றை ஸ்தாபித்து சான்றுகளை சேமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உபகரணங்களை மீளமைப்பதற்கு ரூபா 7,760,500 செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.<br>* சட்டமா அதிபர் திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட காணொளி சான்றுகளை பதிவுசெய்யும் வழிகாட்டியின் 2.5 ஆம் பிரிவின் பிரகாரம் சிறுவர்களுக்கான தங்குமிட வசதிகளை வழங்குவதற்காக பாதுகாப்பான இல்லம் ஒன்று (safe house) அறிக்கைத் திகதி வரையும் அதிகார சபையால் பேணிச் செல்வாற்கு தவறியிருந்தது. | | |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இலக்கம் 01/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாண இலக்கம் 371(5) | மீளாய்வாண்டின் போது 67 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 1,558,700 ஆக முற்பணம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | மீண்டும் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படாமல் இருப்பதற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் முற்பணம் தீர்த்து வைக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 11,341,231 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 10,255,583 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,085,648 வீழ்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு பயன்பாட்டு செலவினம் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்தினின்மைகள்

| அதிகார பலம் இன்றிய கொடுக்கல் வாங்கல் தொடர்பான விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகார சபையின் நடவடிக்கைத் திட்டத்திற்குரியதாக பேணிச் செல்லப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களில் வள பங்களிப்பாளராக அதிகார சபையின் மாவட்ட மற்றும் பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தமது கடமைக் காலத்தில் பங்குபற்றி அதிகாரம் இல்லாமல் அவர்களுக்கு ரூபா 442,800 படிகள் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக பங்கு பற்றுகின்ற அரசாங்கத்தின் உத்தியோகத்தர்களுக்காக திறைசேரி அங்கீகாரம் இன்றி பங்குபற்றல் படியாக ரூபா 500 வீதம் செலுத்தப்பட்டிருந்தது. | 2016.10.27 ஆந் திகதி நிதி அமைச்சினால் விநியோகிக்கப்பட்ட DMS/1760/Vol-1 என்ற சுற்றறிக்கையின் பிரகாரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டதுடன் அங்கீகரிக்கப்பட்ட எண்ணக்கரு பத்திரத்தின் பிரகாரம் சகல பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது என. ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்காக பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் போக்குவரத்துக் கட்டணமாக வருகைப் படி ஒன்று வழங்கப்பட்டுள்ளது என. | அதிகார சபையின் உள்ளக உத்தியோகத்தர்களுக்காக படி செலுத்துவதற்காக உரிய பிரகாரம் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

### 3.2 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2014 ஆம் ஆண்டு முதல் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு பயன்படுத்துமாறு வாய் மூலம் கையளிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்குரிய கட்டிடம் அறிக்கை திகதி வரையும் எந்த ஒரு பயன்பாட்டுக்கும் எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. எனினும் அந்த கட்டிடத்திற்கு பாதுகாப்பு சேவை வழங்குவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,084,684 செலவிடப்பட்டிருந்தது. | இந்த கட்டிடத்தை ஆக்க பூர்வாமாக பயன்படுத்துவதற்காக பொருத்தமான நிறுவனத்திற்கு கையளிப்பதற்கு அறிவிக்கப்பட்டுள்ளது என. | இந்த கட்டடத்தை ஆக்கபூர்வமாக பயன் படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு அடுத்தால் உள்ள காணி ரூபா 18,317,757 பெறுமதியில் 2016 ஆம் ஆண்டின் போது 30 வருட குத்தகை அடிப்படையின் கீழ் | இந்தக் காணியின் உத்தேசிக்கப்பட்ட நிர்மாணத்திற்காக நிதி அமைச்சில் இருந்து நிதி ஏற்பாடு தொடர்ச்சியாகக் கோரப்பட்ட போதிலும் | விளைவற்றுக் காணப்படுகின்ற காணியை பயன் படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| பெறப்பட்டிருந்த போதிலும் அந்த காணி அறிக்கை திகதி வரையிலும் எந்தவொரு பணிகளிலும் ஈடுபடுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | அது தொடர்பான நிதி ஏற்பாடு ஒதுக்கபடாமையினால் மிகுதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது என. | |

**3.3 ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்ட வழங்கல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகார சபையின் உதவி முகாமையாளர் (நிகழ்ச்சித் திட்டம்) 12 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக வெளி நிறுவனத்திற்கு விடுவிக்கப்பட்டதன் காரணமாக இந்த பதவியின் மூலம் நிறைவேற்ற வேண்டிய பணிகளை செயற்திறனான வகையில் நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. | இந்த உத்தியோகத்தர் நிதி இராஜாங்க அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் பதவிக்கு நியமிப்பதற்காக சேவையில் இருந்து விடுவித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது என | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இருக்கின்ற உத்தியோகத்தர்கள் நீண்ட காலமாக ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கும் போது அதிகார சபையின் செயலாற்றலுக்கு ஏற்படுகின்ற தாக்கம் தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும். |

**3.4 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 சனவரி 25 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்திற்கு முரணாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள், முகாமையாளர் (திட்டமிடல் மற்றும் தகவல்), தகவல் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் பதவி, முகாமையாளர் நிகழ்ச்சித் திட்டம், உதவி பணிப்பாளர் (ஊடகம் மற்றும் தகவல்) என்ற பதவிகளுக்காக ஆகக் குறைந்த அடிப்படைத் தகைமைகள் இல்லாத உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். | இது தொடர்பாக பணிப்பாளர் சபையின் ஆலோசனையின் படி மூன்று நபர்களை உடைய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் குழுவினால் உரிய பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது. உரிய அறிக்கை கிடைத்த பின்னர் பணிப்பாளர் சபைக்கு அனுப்பி மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்திற்கு இணங்க சகல ஆட்சேர்ப்புக்களும் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சிறுவர் பகல் பராமரிப்பு நிலையங்கள் தொடர்பான தேசிய கொள்கை ஒன்றைத் தயாரித்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு மீளாய்வாண்டின் போதும் அதிகார சபை தவறியிருந்தது. | சட்டமா அதிபர் திணைக்களம் ஊடாக பதிலை பெற்றுக் கொள்வதில் ஏற்பட்ட தாமதத்தின் காரணமாக அமைச்சரவை அங்கீகாரத்திற்கான குறிப்பு 2023 ஆம் ஆண்டின் போது அனுப்புவதற்கு முடியாதிருந்தது. | சிறுவர் பகல் பராமரிப்பு நிலையங்கள் தொடர்பாக தேசிய கொள்கை ஒன்றை அமுல்படுத்துவதற்காக விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |